**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

CC.No. 17/2021

| | | |
|---|---|---|
| Deposition of Witness for PW | : | 4 |
| Name (திரு/திருமதி) | : | கிருஷ்ணமூர்த்தி |
| Father's Name/ Husband's Name | : | நாகமணி |
| Village & Taluk | : | கள்ளாடிப்பட்டு |
| Calling | : | |
| Age | : | 78 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.07.2025**

**(எதிரி ஆஜர் இல் லை. கு.வி.மு.ச.317 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

1. இந்த வழக்கு விபத்தில் இறந்த குணசீலன் த/பெ. முனுசாமி எனது மருமகன் ஆவார். சுமார் 8-9 வருடங்களுக்கு முன்பு காலை 8.30 மணிக்கு எனது மருமகன் அவருக்கு சொந்தமான இரு சக்கர வாகனத்தில் ரேசன் கடைக்கு செல்வதற்காக செஞ்சியில் இருந்து புறப்பட்டார். எனது மகள் அவரது மகளை பார்க்க திருச்சிக்கு சென்றிருந்தார். ஆலும்பூண்டி செல்லும் சாலையில் மலை அருகே வளைவான பாதையில் பெங்களூரில் இருந்து வந்த கார் ஒன்று என் மருமகன் –ஓட்டிக்சென்ற இருச்சக்கர வாகனத்தின் மீது மோதிவிட்டது. அதில் அவர் ஓடையில் விழுந்துவிட்டார். காயமடைந்த அவரை 108 அவசர ஊர்தி மூலம் செஞ்சி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக திண்டிவனம் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். செல்லும்போது வழியிலேயே அவர் இறந்துவிட்டார். விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவு எண் எனக்கு தெரியாது. எனது மருமகன் ஓட்டி சென்ற இரு சக்கர வாகனத்தின் பதிவு எண்ணும் தெரியாது. விபத்து ஏற்படுத்திய

வாகனத்தின் ஓட்டுநரை நான் பார்க்கவில்லை. காவலர்கள் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

18 அல்லது 19ம் தேதி விபத்து நடைபெற்றது. சம்பவம் நடந்தபோது நான் ஆலம்பூண்டிக்கு சென்று கொண்டிருந்தேன். செஞ்சி கோட்டையை அடுத்து உள்ள முதல் வளையில் மலை அருகில் விபத்து நடைபெற்றது. நான் சொல்லும் இடத்தில் விபத்து நடைபெறவில்லை என்றாலும், எனது மருகனின் இறப்பிற்கு இழப்பீடு பெற வேண்டி எனது மகள் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை** : இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/-B.Vidhya

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

CC.No. 17/2021

| | | |
|---|---|---|
| Deposition of Witness for PW | : | 5 |
| Name (திரு/திருமதி) | : | பழனி |
| Father's Name/ Husband's Name | : | ரங்கசாமி |
| Village & Taluk | : | மேல்சேவூர் |
| Calling | : | விவசாயம் |
| Age | : | 48 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.07.2025**

**(எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.317 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை–**

1. இந்த வழக்கு விபத்தில் இறந்த குலசேகரன் என்பவரை எனக்கு தெரியும் அவர் எனக்கு சகளை ஆவார். கடந்த 25.11.2019 அன்று காலை சுமார் 08.30 மணியளவில் நான் செஞ்சிக்கு வந்து கொண்டிருந்தபோது குலசேகரன் என்பவர் மனைவி வளர்மதி திருஞானசெல்வி என்பவர் எனக்கு போன் செய்து அவரது கணவருக்கு சிறுவாடி முட்டுக்காடு என்ற இடத்தில் Swift கார் மோதி விபத்து ஏற்பட்டதாக என்னிடம் சொன்னார். தகவல் அறிந்து நான் சம்பவ இடத்திற்கு சென்றேன். அங்கு விபத்து ஏற்படுத்திய கார் இருந்தது. எனது சகளை விபத்து ஏற்பட்டு அருகில் இருந்த முட்புதரில் விழுந்து இருந்தார். காரின் பதிவு எண் தற்போது நினைவில் இல்லை. கர்நாடகா பதிவு எண் கொண்ட வண்டி என்று மட்டும் நினைவில் உள்ளது. எனது சகளை சென்ற இரு சக்கர வாகனத்தின்

பதவு எண் TN 16 Z 1108 ஆகும். காயமடைந்த அவரை 108 அவசர ஊர்தி மூலம் செஞ்சி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றேன். அவருக்கு தலை மற்றும் வலது காலில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. செஞ்சி அரசு மருத்துவமனையில் இருந்து மேல் சிகிச்சைக்காக பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தனர். தனியார் ஊர்தி மூலம் எடுத்த செல்லும் போது வழியிலேயே அவர் இறந்துவிட்டார். சம்பவ இடத்தில் வாகனத்தின் ஓட்டுநரை நான் பார்க்கவில்லை. காரில் பயணம் செய்த 3 நபர்கள் சம்பவ இடத்திடம் இருந்தார்கள் காவலர்கள் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. விபத்து குறித்த தகவல் கிடைக்கப்பெற்ற நேரம் எனக்கு சரியான தெரியவில்லை. ஆனால் சுமார் 09.00 மணியளவில் சம்பவ இடத்திடம் சென்றுவிட்டேன். சம்பவம் 09.00 மணிக்கு நடந்தது. சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. விபத்து குறித்த தகவலை பழனிவேல் என்பவர் இறந்த நபரின் மனைவிக்கு சொன்னார். நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், அ.சா.1 கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. காவலர்கள் என்னை விசாரிக்கவில்லை.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/–B.Vidhya

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.